JUDICIAL FORM NO.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 190/2025 | Crime No. | 313/2024 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW1– அகிராஜ்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 9th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் மேட்டூர், குமரன் நகர் மருத்துவர் மருத்துவமனை காலனியில் குடியிருந்து கொண்டு ஆக்குபேஷனல் படித்து வருகிறேன். கடந்த 08.07.2024 ஆம் தேதியன்று, காலை 09.30 மணிக்கு மேல் நான் வீட்டில் இருந்து கிளம்பி கல்லூரிக்கு செல்வதற்காக எனது TN 93 E 7455 என்ற பதிவெண் கொண்ட ராயல் என்ஃபீல்டு ஹிமாலயன் வாகனத்தில் மேட்டூரிலிருந்து பவானி நோக்கி சாலையில் இடதுபுறமாக சென்று கொண்டிருந்தேன். மாணிக்கம்பாளையம் பிரிவு அருகே நான் சென்று கொண்டிருந்தபோது பவானியில் இருந்து மேட்டூர் செல்லும் சாலையில் வந்த ஜூபிடர் வாகனம் தவறான திசையில் சடார் என ரோட்டில் வந்து எனது வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. ஜூபிடர் வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான். சாட்சி எதிரியை அடையாளம் காட்டி சாட்சியமளிக்கிறார். அந்த விபத்தில் எனக்கு இடது கை ஆள்காட்டி விரல் கட் ஆனது. வலது பக்க காலர்போன் எலும்பு முறிவு ஏற்பட்டது. பின்னர் எனது நண்பர் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தார். ஜூபிடர் வாகனத்தை ஓட்டி வந்த நபர் பெயர் பழனிசாமி என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக பவானியில் உள்ள சுகம் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்து அங்கு 10 நாட்கள் தங்கி சிகிச்சை எடுத்துக் கொண்டேன். இந்த விபத்து சம்பந்தமாக நான் சுகம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை முடிந்து சிகிச்சையில் இருந்தபோது அம்மாபேட்டை போலீசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.09 06:38:03 +0530

**செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தின்போது என்னை யார் அழைத்துச் சென்றார்கள் என்றால், கேசவன் என்கின்ற எனது நண்பர் அழைத்துச் சென்றார். கேசவன் என்பவர் விபத்து நடந்த முடிந்த பின்பு தான் வந்து என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றால், சரியல்ல. அவர் அங்கு தான் இருந்தார். எனது வாகனத்தின் குதிரை திறன் 411 CC என்றால், சரிதான். ஜூபிடர் வாகனம் 90 CC என்றால். அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எனது கல்லூரிக்கு மேட்டூரில் இருந்து இருசக்கர வாகனத்தில் தான் வருவேன் என்றால். சரிதான். நான் வந்த சாலையின் அகலம் எனக்கு தெரியுமா என்றால். அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அந்த சாலை இருவழிப்பாதை. சம்பவயிடத்திற்கு அருகே மண் ரோடு உள்ளது என்றால், மண் ரோடு எதுவும் இல்லை. வீடு மற்றும் கடைகள் தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், சாலைஅருகே என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால், சம்பவம் நடந்தவுடன் நான் சிறிது மயக்கத்தில் இருந்தேன், அதனால் எதுவும் எனக்கு தெரியவில்லை.

சம்பவயிடத்திற்கு அருகே கிழபுறமாக ஒரு பிரிவு சாலை செல்கிறது என்றால், சரிதான். நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நோக்கி வந்தேன் என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி சம்பவ தினத்தன்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இருபுறமும் எந்த வாகனமும் வரவில்லை என்று பார்த்துவிட்டு வாகனமானது மேற்கு திசையில் மண் ரோட்டில் மெதுவாகத்தான் வந்தது என்றாலும், நான் தான் அதிவேகமாக வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால், சரியல்ல. எதிரி ஒட்டிய வாகனத்தில் இயந்திரத்துடன் குறைவு என்றாலும், நான் ரோட்டில் சென்ற வாகனத்தில் இயந்திர திறன் அதிகம் என்றாலும், நான் தான் விபத்தை ஏற்படுத்தினேன் என்றாலும், சரியல்ல.

நான் மோதியதில் ஆஜர் எதிரிக்கு இடது கை மேல் பகுதியும், இடது சுண்டு விரல் முறிவும் மற்றும் இடது பக்கம் நெஞ்சில் மொக்கைக்காயமும் ஏற்பட்டது என்றாலும், மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார் என்றால், சரியல்ல. விபத்தில் எதிரிக்கு அடிபட்டு எதிரி காயம் ஏற்பட்டு எவ்வித வேலையும் செய்யாமல் அவரது குடும்பம் அவரைத்தான் நம்பித்தான் இருந்து வருகிறது என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவர்தான் தவறான திசையில் வந்தார். எனது வாகனத்தின் சேதாரத்தை பார்த்தால் நான் தான் வாகனத்தை வேகமாக இயக்கி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால், சரியல்ல.

சம்பவயிடத்திற்கு அருகே சம்பவ நேரத்தில் எத்தனை நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. கேசவன் எந்த ஊரைச் சார்ந்தவர் என்றால், பவானியை சார்ந்தவர். நான் படிக்கும் கல்லூரி எங்கு உள்ளது

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.09 06:38:12 +0530

என்றால், குமாரபாளையத்தில் உள்ள வட்டமலையில் உள்ளது. நான் சொல்வது போல். சொன்ன நேரத்தில். சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், கேசவன் அங்கு இல்லை என்றாலும், எனது அஜாக்கிரதையின் காரணமாகத்தான் விபத்து ஏற்பட்டது என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.09 06:38:19 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-2  Witness
for Prosecution

| CC.No. | 190/2025 | Crime No. | 313/2024 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW2–கேசவன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 9th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பவானியில் குடியிருந்துகொண்டு ஆக்குபேஷனல் தெரபிஸ்ட் படித்து வருகிறேன். கடந்த 08.07.2024 ஆம் தேதி, காலை 09:40 மணிக்குநான் சித்தாரில் உள்ள எனது அத்தை வீட்டில் இருந்தேன். பின்னர் நான் அகிலாவிடம் ப்ராஜெக்ட் புக் வாங்குவதற்காக மாணிக்கம்பாளையம் பிரிவு அருகே காலை 09.30 மணிக்கு நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது வேறு ஒருவர் அகிராஜ் போனிலிருந்து எனக்கு ஒரு நபர் ஃபோன் செய்து அகிராஜிற்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். பின்னர் நான் விபத்து நடந்த இடமான மாணிக்கம்பாளையம் பிரிவிற்கு கொஞ்சம் முன்பாக சென்று பார்த்தபோதுஅகிராஜிற்கு முட்டி, வலது பக்க தோள்பட்டை ஆகிய இடங்களில் இடங்களில் அடிப்பட்டு இடது பக்க ஆள்காட்டி விரல் உடைந்து இருந்தது. விபத்து குறித்து நான் விசாரித்தபோது அகிராஜ் மேட்டூரில் இருந்து அவரது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரி குறுக்கே வந்து அகிராஜ் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு அதன் பின்னிட்டு பவானி சுகம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.09 06:38:27 +0530

கடந்த 08.07.2024 ஆம் தேதி அக்யராஜும், நானும் சொந்த வேலையாக காடப்பநல்லூருக்கு போக வேண்டியிருந்ததால் அகிராஜ் என்னை மாணிக்கம்பாளையம் பிரிவில் வந்து இருக்குமாறு சொன்னார் என்றும் நானும் மாணிக்கம்பாளையம் பிரிவில் வந்து நின்று கொண்டிருந்தேன் என்றும் நான் வெகுநேரமானதால் நான் அகிராஜ் வருவார் என்று பார்த்துக்கொண்டே சிறிது தூரம் நடக்கலாம் என்று மெயின் ரோட்டில் வந்தபோது 09.40 மணியளவில் அம்மாபேட்டை to பவானி மெயின் ரோட்டில் அகிராஜ் அவரது TN 93 E 7455 என்ற பதிவு எண் கொண்ட இமாலயன் ராயல் என்பீல்ட் பைக்கில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றும் அப்போது அதே ரோட்டில் கிளப்புற ஓரமாக ராங் சைடில் அகிராஜுக்கு எதிராக பின்னர் பெயர் கேட்டு தெரிந்த பழனிசாமி என்பவர் TN 7 X 9556 என்ற பதிவெண் கொண்ட TVS ஜூபிடர் வண்டியை அதிவேகமாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்து வந்தவரை பார்த்து அகிராஜ் ஹாரன் அடித்தும் அதை கவனிக்காமல் எவ்வித சிக்னலும் செய்யாமல் மாணிக்கம்பாளையம் பிரிவு வீரமாத்தி சேம்பர் அருகே திடீரென்று மேற்கு நோக்கி திருப்பி அகிராஜ் ஓட்டி வந்த பைக்கில் மோதி ஆஜர் எதிரி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் போலீசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.09 06:38:34 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 190/2025 | Crime No. | 313/2024 | Station | Ammapet |

| | | | |
|---|---|---|---|
| Name | **PW3–மூர்த்தி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 9th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிங்கம்பேட்டையில் குடியிருந்து கொண்டு பில்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 1 – 1/2 வருடத்திற்கு முன்பு காலை 09.00 – 9:30 மணிக்கு மாணிக்கம்பாளையம் அருகில் உள்ள பெரியசாமி இரும்பு கடையில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஆஜர் எதிரி பழனிச்சாமி என்பவர் பெரிய வண்டியில் மேட்டூர் பக்கம் இருந்து வந்தார். அதே சாலையில் மேட்டூர் பக்கம் இருந்து வேகமாக வந்த ராயல் என்ஃபீல்டு வாகனம் பழனிச்சாமி வண்டியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. அந்த விபத்தில் பழனிச்சாமிக்கு காலில் பலத்த அடிபட்டது. கையிலும் அடிபட்டது. பின்னர் பழனிச்சாமி ஆம்புலன்ஸ் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசாரணை விசாரிக்க நடந்து விவரங்களை சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 08.07.2024 ஆம் தேதி, காலை 09.40 மணிக்கு நானும், பாலகிருஷ்ணனும் சாய் கார் கேர் கம்பெனி அருகில் சொந்த வேலையாக வந்து மெயின் ரோட்டை பார்த்தவாறு நின்று கொண்டிருந்தோம் என்றும் அப்போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஜெயராஜ் மகன் அகிராஜ் என்பவர் அம்மாபேட்டை to பவானி மெயின் ரோட்டில் TN 93 E 7455 இமாலயன் ராயல் என்ஃபீல்டு பைக்கில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றும் அப்போது அதே ரோட்டில் கிளப்புற ஓரமாக ராங் சைடில் அகிராஜுக்கு எதிராக பின்னர் பெயர் விலாசம்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.09 06:38:42 +0530

கேட்டு தெரிந்த காடப்பநல்லூரை சேர்ந்த பழனிசாமி என்பவர் TN 77 X 95 56 TVS Jupiter வண்டியை அதிவேகமாகவும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்தவரை பார்த்து அகிராஜ் ஹாரன் அடித்தும் அதை கவனிக்காமல் எவ்வித சிக்னலும் செய்யாமல் மாணிக்கம்பாளையம் பிரிவு வீரமாத்தி சேம்பர் அருகே திடீரென்று மேற்கு நோக்கி திருப்பி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் விபத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.09 06:39:01 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

| CC.No. | 190/2025 | Crime No. | 313/2024 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW4– பொன்னுசாமி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 9th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 1 – 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 09.30 மணிக்கு நான் அம்மு பேக்கரி அருகே டீக்கடையில் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது போலீசார் அங்கு வந்தார்கள். போலீசார் எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் எதற்காக என்று கேட்டேன். போலீசார் சம்பவம் நடந்ததாக சொன்னார்கள். அதற்காக போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2 ஆக இரண்டாம் குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 08.07.2024 ஆம் தேதி, மாலை நான் மாணிக்கம்பாளையம் பிரிவில் அருகில் வந்தபோது அம்மாபேட்டை காவல் நிலைய போலீசார்கள் வந்து வீரமாத்தி சேம்பர் அருகில் விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் அதை பார்த்து நான் போய் விசாரிக்க பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பாக்யராஜ் என்பவர் அம்மாபேட்டை to பவானி மெயின் ரோட்டில் இமாலயன் ராயல் என்ஃபீல்டு பைக்கில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தபோது அதே ரோட்டில் கிழப்புறமாக வந்த பழனிச்சாமி என்பவர் TN 77 X 9556 TVS Jupiter வாகனத்தை அதிவேகமாகவும். அஜாகிரதையாகவும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்தவரை பார்த்து அகிராஜ் ஹாரம் அடித்தும்

அதை கவனிக்காமல் எவ்வித சிக்னலும் செய்யாமல் மாணிக்கம்பாளையம் பிரிவு வீரமாத்தி சேம்பர் அருகே திடீரென்று மேற்கு நோக்கி திருப்பி அகிராஜ் ஓட்டி வந்த பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அகிராஜிற்கு வலது தோள்பட்டை, இடது கை, ஆள்காட்டி விரல், வலது கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும் அதனால் சம்பவயிடத்தை பார்வையிட இருப்பதாகவும் போலீசார் என்னை சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டார் என்றும் நானும் சம்மதித்தேன் என்றும் பின்னர் போலீசார் மாலை 05.00 மணிக்கு சம்பவயிடத்தினை பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக் கொண்டார்கள் என்றும் அதற்கு சாட்சியாக நானும், சின்னசாமியும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.09 06:39:08 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.